www.padippakam.com


# ஏழைதாசன்

- திங்கள் இலக்கிய இதழ் -

□ 10—1

□ செப்டம்பர் '2001

□ இதழ் எண் : 91

□ விலை ரூ 3/-

★ 10 - வது ஆண்டு தொடக்கம்


● எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் — கண்ணதாசன்

**தமிழகத்தின் (தலைசிறந்த பெண்கவிஞர்!**
**தமிழ், தமிழர் நலம்சார்ந்த நற்கவிஞர்!**



பதவி உயர்வுக்கான முன்னுரிமை இருந்தும் இலக்கியப் பணியில் உள்ள ஆர்வம் காரணமாக பணி உயர்வினை மறுத்து 37 ஆண்டுகள் ஆசிரியப் பணியில் பொது மக்களும், மாணவர்களும், கல்வித்துறை அலுவலர்களும் பாராட்டும் வகையில் சிறப்பாகக் கடமை ஆற்றி 1998-ல் ஓய்வு பெற்றார்.

கவிதைச் செல்வர்

**கவிஞர். மு. வாணி**

தலைமை ஆசிரியர் (ஓய்வு),
ஆற்காடு,
பாளையூர் - 603309
செய்யூர் வட்டம், செங்கற்...

படிப்பகம்

www.padippakam.com


# எய்ட்ஸ் நோயா? பயம் வேண்டாம்!

எய்ட்ஸ் தீர்க்க முடியாத ஒரு நோய் அல்ல. சித்த மருத்துவத்தில் குணமாகிறது. எய்ட்ஸ் என்று உறுதி செய்யப்பட்ட மருத்துவச் சான்றுகளுடன் வர வேண்டும்.

**நோயின் தன்மையைப் பொருத்து 100 முதல் 200 நாட்கள் வரை மருந்துகள் சாப்பிட வேண்டும். நடமாட்டம் இல்லாதவர்களை அழைத்து வர வேண்டாம்.**

**H.I.V.** கிருமிகள் முழுமையாக அழிக்கப்படும் வரை சிகிச்சை அளிக்கப்படும். மருந்துகள் சாப்பிட்டு முடித்த பின்பு 'P 24 ஆன்டிஜென்டெஸ்ட்' என்ற ரத்தப் பரிசோதனை செய்து பார்க்கவும். நெகட்டிவ் ஆக மாறும். இப்பரிசோதனை முறையே போதும். வெஸ்டரன் பிளாட் பரிசோதனையில் நெகட்டிவ் ஆக வேண்டுமென்று விரும்புபவர்கள் தொடர்ந்து சிலகாலம் மருந்துகள் சாப்பிட வேண்டும்.

மருத்துவத் துறையில் 45 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணி ஆற்றியவர். 73 வயது நிரம்பியவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ் நோய் பிரிவிற்கு' மதுரை மாவட்டத்திற்குத் தலைவராய் இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளுக்குச் சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர்.



சித்த மருத்துவ மேதை :

## அரிமா டாக்டர் A.தேவராஜன், R.M.P.(IND)C.B.I.M.

'எய்ட்ஸ் நோய் ஒழிப்பு மருத்துவ மையம்' 7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் - 625 703.
(மனோன்மணி ஆஸ்பத்திரி) மதுரை மாவட்டம் போன் : 04549 - 25695

குறிப்பு : பேரையூரில் 7-3/125, பெருமாள் கோவில் தெருவில் மட்டுமே எனது மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. வேறு எங்கும் கிளைகளோ, ஏஜெண்டுகளோ கிடையாது. தரகர்கள் யாரும் என் பெயரைச் சொல்லி அழைத்தால் ஏமாந்துவிடாதீர்கள். ஆட்டோ டிரைவரிடம் 'மனோன்மணி ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்' என்று சொன்னால் அழைத்து வந்து விடுவார்கள்.

**மருத்துவ ஆலோசனைக்கும், பதிவிற்கும் கட்டணம் ரூ.25/- கட்டணமின்றி வரும் கடிதங்களுக்கு பதில் வராது.**

**பேரையூர் வருவதற்கு வழி :** மதுரை To சாப்டூர் பஸ் மார்க்கத்தில் பேரையூர் உள்ளது. வடக்கிலிருந்து வருபவர்கள் மதுரை வந்து பழங்காநத்தம் பஸ் ஸ்டாண்டிலிருந்து புறப்படும் 'சாப்டூர்' பஸ்ஸில் ஏறி T.கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம். தெற்கிலிருந்து வருபவர்கள் விருதுநகர் பஸ் ஸ்டாண்டிலிருந்து கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம்.


படிப்பகம்

www.padippakam.com

# சினிமா

ஊசியில்லாமல்
உள்ளே போகும் பெத்தடின்!

கலாச்சாரத்தை கெடுத்து
காசு பார்க்கும் விலைமாது!

இன்றைய சூழ்நிலையில்
இதுவும் ஒருவகை எயிட்சே!

காதல் என்ற புனித சொல்
கோடம்பாக்கத்தில்
கால்பந்தாய் போனது!

சின்னத்திரைக்குள்
அடங்கி வரும் — இன்றைய சினிமா
தமிழனின்
எண்ணத் திரையிலிருந்து
நீங்கும் நாளே
தமிழரின் திருநாள்!

— பொன். தங்கராசு,
புதுக்கோட்டை

படிப்பகம்

www.padippakam.com

# தமிழகத்தின் தலைசிறந்த பெண்கவிஞர்! தமிழ், தமிழர் நலம்சார்ந்த நற்கவிஞர்!



முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஐந்தாம் வகுப்பு வரையே பள்ளியில் பயின்ற இவர், திருமணத்துக்குப் பின் எட்டாம் வகுப்புத் தேர்வினை தனிப்படிப்பு முறையில் எழுதித் தேர்ச்சி பெற்று இளநிலை ஆசிரியப் பயிற்சி முடித்து, இவர் ஆரம்பக் கல்வி பயின்ற பள்ளியிலேயே ஆசிரியப் பணியைத் துவக்கும் பேறு பெற்றார். பின்னர் பள்ளி இறுதிநிலைத் தேர்வு, இடைநிலை ஆசிரியர் பயிற்சி, பி.லிட், பி.எட், எம்.ஏ. ஆகிய தேர்வுகளை எழுதி நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியையாகப் பணி உயர்வு பெற்றார். பள்ளித் துணை ஆய்வர் தேர்வு, மாவட்ட அலுவலக நடைமுறைத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்று பதவி உயர்வுக்கான முன்னுரிமை இருந்தும் இலக்கியப் பணியில் உள்ள ஆர்வம் காரணமாக பணி உயர்வினை மறுத்து 37 ஆண்டுகள் ஆசிரியப்பணியில் பொதுமக்களும், மாணவர்களும், கல்வித்துறை அலுவலர்களும் பாராட்டும் வகையில் சிறப்பாகக் கடமை ஆற்றி 1998-ல் ஓய்வு பெற்றார்.

1967-ல் பாக்கியலெட்சுமி இதழில் தொடங்கிய இவரின் இலக்கியப் பணி 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. காஞ்சி, குயில், மாலை முரசு, முல்லைச்சரம், தமிழ்ப்பணி, மீண்டும் கவிக்கொண்டல், ஏழைதாசன், அமுதசுரபி, தினபூமி, கவிக்கோலம்முதலான 30-க்கு மேற்பட்ட இலக்கிய இதழ்களில் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளார். சென்னை, புதுவை வானொலிகளில் மெல்லிசைப் பாடல்கள் எழுதி உள்ளார் தமிழகத்தின் குறிப்பிடத்தக்க கவிஞர் பெருமக்கள் அனைவருக்கும் நன்கு அறிமுகமான இவர், அவர்களுடன் பல கவியரங்கம், பட்டிமன்றங்களில் பங்குபெற்றுள்ளார். அமுதசுரபி இதழ் கவியரசு நா. காமராசன் தலைமையில் நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றிருக்கிறார். புதுவை அரசு நடத்திய பாரதி விழாவில் கவியரங்கத்தில் கலந்துகொண்டு பாரதி பட்டயம் பெற்றுள்ளார். திண்டிவனம் தென்னாற்காடு மாவட்டத் தமிழ்க்கவிஞர் பெருமன்றம் சார்பில் கவிதைச் செல்வர் பட்டயம் பெற்ற இவர், பெருங்கவிக்கோ வா.மு.சே. மணிவிழாவில் ஓங்கு தமிழ்ப்பாவலர் பட்டமும், சென்னை தமிழகக் கவிஞர் கலைமன்றம் வழங்கிய நற்கவிஞர் பட்டமும் பெற்றுள்ளார்.

தமிழ், தமிழர் நலம் சார்ந்த இலட்சிய முனைப்போடு இவரது இலக்கியப் பணி தொடர்ந்து வருகிறது. தமிழகத்தின் தலைசிறந்த பெண்கவிஞர்கள் வரிசையில் நிச்சயமாக இவரும் இடம் பெறுவார் என்ற நம்பிக்கை நமக்குள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

## மின் - பா

மழை வெள்ளம்
நழுவிய குடை
பரிசல்.

— 'மேகங்கள்' வீ ஜயீ
கும்பகோணம்-1

வரம்பை மீறியதால்
வெட்டுப்பட்டது
விரல்நகம்!

— சித்தை பார்த்திபன்
சித்தையன்கோட்டை, திண்டுக்கல்

தேனில்லாத மலரில்
சிறகடித்தது வண்ணத்துப்பூச்சி
ஆன்மா!

— திருமதி ப. அருளமுதம்
போடி.நாயக்கனூர், தேனி

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ப்பூ ஆதித்தனார்!

வாசப்பூ வாகைப்பூ செங்காந் தள்பூ
வண்ணப்பூ பலநூறு பூப்ப துண்டு!

ஆசைப்பூ ஆதித்தா! தமிழ்ப்பூ ஆனாய்!
அறிவின்பூ உணர்வின்பூ இதழில் தந்தாய்!

பாசப்பூ பண்புப்பூ அன்புப் பூவாய்
பாமரரின் நெஞ்சத்தில் மஞ்சம் கொண்டாய்!

நேசப்பூ வானின்று பாடும் பூவே!
நீயில்லா நாடின்று வாடும் பூவே!

ஓம்சக்தி பராசக்தி அறியோம் நாங்கள்
உன்சக்தி அறிந்தோமே அதனால் தானே

நாம்தமிழர் இயக்கத்தில் நாட்டம் கொண்டோம்
நாம்யார்க்கும் குடியல்லோம் பகையை வெல்வோம்

வேம்பினது பூங்காற்றாய்த் தமிழர் நாட்டில்
வீசுவது நாம்தமிழர் இயக்கம் அன்றோ

ஆம்!பக்தி எதற்காக பார தத்தில்?
அகப்பற்று வைப்போமே தமிழ கத்தில்!

உணர்ச்சிக் கவிஞர்
**சிங்காரவேலன்**
நாம் தமிழர் இயக்கம், திருச்சி-2.

படிப்பகம்

www.padippakam.com

# பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழி:

## — நாம் தமிழர் இயக்கம் வலியுறுத்தல்

தமிழ்நாட்டில் அரசுத் தொடக்கப் பள்ளிகள், மழலையர் பள்ளிகள் மெட்ரிகுலேசன் பள்ளிகள், சிறுபான்மை மொழியினரின் பள்ளிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆகியவற்றில் ஒன்று முதல் 5-ஆம் வகுப்பு வரை தமிழ் மொழிப் பாடமாகவும், பயிற்று மொழியாகவும் இருக்க வேண்டும் என தமிழ் ஆன்றோர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

திருச்சியில் நாம் தமிழர் இயக்கத்தின் மொழி ஆய்வுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

1892-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருக்கும் கல்வித் துறையின் விதிமுறை, மாநில மொழியில்தான் பயிற்றுமொழி இருக்க வேண்டும். அரசியல் அமைப்பின் 350-ஆவது பிரிவு இதற்கான அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு வழங்கியுள்ளது.

இதன்டிப்படையில் தனியார் நடத்தும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் உள்பட தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் தமிழே பயிற்று மொழி எனவும், மழலையர் பள்ளிகளில் 5-ல் 2 பாடங்களைத் தாய் மொழியில் கற்பிக்க வேண்டும் என்று 10-11-1999ல் அன்றைய தமிழக அரசு ஆணை பிறப்பித்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆங்கிலப் பள்ளிகளின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் சென்னை உயர்நீதி மன்றம் தமிழக அரசு ஆணைக்கு தடை விதித்தது.

தமிழக மக்களின் அடிப்படை உரிமையை பாதிக்கும் உயர்நீதி மன்றத் தடையை எதிர்த்து அன்றைய அரசு உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

இந்த முறையீட்டின் பேரில், உச்சநீதி மன்றம் சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்டுள்ளது.

இது தமிழக மக்களின் மொழிப் பிரச்சனை, உயிர் பிரச்சனை என்பதால் தற்பொழுதுள்ள முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அரசு உச்சநீதி மன்றத்தில் 10-11-1999 தேதியிட்ட அரசு ஆணையை உறுதி படுத்தும் வகையில் வெற்றியை பெற்றுத்தர வேண்டுமாய் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கூட்டத்தில் கவிஞர் சிங்காரவேலன், கி.ஆ.பெ.வி. கதிரேசன், சு. முருகானந்தம், பேராசிரியர் ச. சாமிமுத்து, இரா. விஷ்ணுதாஸ் உள்பட இயக்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

# ஸ்ரீ ஜெயேந்திரர் ஜெயந்தி விழாவில்

## டாக்டர். தேவூர் மணிவாசகம் குழுவினரின்

## இலவச மருத்துவ முகாம்

இருள்நீக்கி, ஆகஸ்ட்.5—

காஞ்சி சங்கரமடம் **ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின்** 67வது ஜெயந்தி விழா, இலவச மூலிகை மருத்துவ முகாம் அமரபாரதி ஆசிரியர் **விஸ்வநாதன்**, தலைமையில் திருவாரூர் மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குநர் **எஸ். தர்மராஜன்**, ஊராட்சி மன்ற தலைவி **தவமணி** முன்னிலையில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது.

ஜனக்கல்யாண் இலவச போதைத் தடுப்பு மைய டாக்டர் திருத்துறைப்பூண்டி **எழில்மோகன்** வரவேற்றார்.

கால் ஆணி, உப்புநீர், மூட்டுவலி, ஆரம்ப நீரிழிவு, சோரியாசிஸ், வெண்புள்ளி, அதிக இரத்தக் கொதிப்பு, பக்கவாதம், தலைமுடிக் கோளாறுகள், மூலம், பெரும்பாடு, வெள்ளைப்போக்கு ஆகிய நோய்களுக்கு பிரபல மூலிகை மருத்துவ நிபுணர் **தேவூர்ஜி மணிவாசகம்** சிகிச்சை அளித்தார் யோகாசன செயல் விளக்கத்தை டாக்டர் **த. யோக மன்னர் சிவாஜி** செய்து காட்டினார்.

இந்தியன் வங்கி முன்னாள் தலைவர் **டி.எஸ். ராகவன்** முகாமை துவக்கி வைத்தார்.

படிப்பகம்

www.padippakam.com

'அமரபாரதி' ஜெயந்தி விழா மலரை கும்பகோணம் சிட்டி யூனியன் வங்கி தலைவர் **நாராயணன்** வெளியிட தமிழக சட்டப் பேரவை செயலாளர் **ராஜாராமன்** பெற்றுக் கொண்டார்

கோவை சங்கரா கண்மருத்துவமனையின் இலவச மருத்துவ முகாமும் நடைபெற்றது

**காமராஜ்** எம்.பி., ரேர்ட்டேரியன் **சந்திரசேகரன்**, தினமலர் **ஜெயபால்**, தினத்தந்தி **ஆறுமுகம்** மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிறைவில் அரிமா **லிக்மிசந்த்** நன்றி கூறினார்.

---

# ஏழைதாசன்

- ☐ ஆண்டுக் கட்டணம் : ரூ. 35/-
- ☐ வாழ்நாள் கட்டணம் : ரூ. 350/-

● 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை-622 002.

✶ E. Mail : ealaidhason@hotmail com
✶ Internet : http : // www.ealaidhason 8m com

(கட்டணம் செலுத்தாதவர்க்கு இதழ் நிறுத்தப்படும். தொகையை பணவிடை, காசோலை, வரைவோலை மூலம் செலுத்தலாம் புடைப்பாளர்கள் இதழ் பரவ, வளர உதவலாம். நல்லெண்ணத்துடன் முகவராக செயல்பட விருப்பம் உள்ளவர்கள் தொடர்புறுக வெளிநாட்டுத் தமிழன்பர்கள் இதழ் கிடைத்ததை உறுதிபடுத்த வேண்டுகிறோம்.)

---

படிப்பகம்

www.padippakam.com

# தேடல்

நான் தேடிக்கொண்டிருக்கிறேன்
என்னையே

பட்டப்பகலில்
கையில் விளக்குடன்
ஜன நெரிசலில்
மனிதனைத் தேடியவரைப்போல்
தேடிக்கொண்டிருக்கிறேன்

என் பெற்றோர்
என் சுற்றம்
என் ஜாதி
என் மதம்
என் நாடு
எல்லாம்
என் மீது பதித்துள்ள
அடையாளங்கள் போக

எஞ்சியுள்ள என்னைத்
தேடிக்கொண்டிருக்கிறேன்.

வடுவூர் சிவ. முரளி
புலிவலம், திருச்சி

படிப்பகம்

www.padippakam.com

# தெய்வத் தமிழ்!

✶ மக்கள் வாழ்வோடு பிறந்தது
மண்ணின் உயிராய் வாழ்ந்தது

ஆரியர் பகையைத் தின்றது
ஆரியர் தம்மொழியை வென்றது!

✶ மூடக்கதை தனதில்லை என்றது
மூர்க்கன் வரலாறை அழித்தது

மழலை மொழியாய் இனித்தது
மருத்துவ அறிவியல் படைத்தது!

✶ ஈடுயிலா இலக்கணம் ஈன்றது
இன்புறு செழுமைப் பூண்டது

அயலார் வியக்க வைத்தது
ஆங்கில வல்லாண்மை எதிர்த்தது!

✶ வியக்கும் அறிவியல் தந்தது
விண்ணதிர் அணுவியல் கொண்டது

பொருளில் சிறப்புக் கண்டது
பொருளியல் நல்கும் திறத்தது!

✶ இத்தனை சிறப்பும் பெற்றது
இன்புறு மக்கள் உண்டது

அமுதாய் நாளும் இனித்தது
அகிலமாண்ட தமிழர் தாயது!

கவிச்சித்தர் **ப.செ. வில்பிரட்**
வெள்ளிச்சந்தை, குமரி

படிப்பகம்

www.padippakam.com

★ தாங்கள் அனுப்பி வரும் ஏழைதாசன் ஒழுங்காக கிடைத்து வருகிறது. தங்களின் இந்த முயற்சிக்கு பாராட்டு. மாதம் தோறும் ஒரு வெளியீட்டை வெளிக்கொணர்ந்து தமிழுக்கு நற்பணியாற்றுகிறீர்கள். தங்கள் வெளியீட்டை இங்கு பலர் வாசித்து பலனடைகிறார்கள். இவ்வெளியீடு தொடர்ந்து சிறப்பாக வெளிவர எமது வாழ்த்துக்கள்.

**ஐ.தி. சம்பந்தன், இலண்டன்**

★ பாசமிகு நெஞ்சமான தமிழ்த்தாசன் அவர்களுக்கு, நனி வணக்கம் நலம். நலமே சூழ்க. கடந்த 6 மாதமாக உடல் நலிவின்மை. பக்கவாத விளைவுகள். தங்கள் இதய வாழ்த்தால் நலமே தொடர்கிறேன் அன்பு வேண்டுகோள் ஏழைதாசன் தமிழ்த்தாசனாக மாற்றவும்.

**திருவள்ளூர் பச்சையப்பனார், மணவாளநகர்**

★ எவ்விதத்திலும் கவர்ச்சி பொழுதுபோக்கு செய்திகள் இல்லாமல் தெள்ளிய தமிழில் தொடர்ந்து இதழை இயக்கிவரும் தங்களது உள்ள உறுதியும் உயர் தமிழ்ப்பற்றும் பெரிதும் போற்றத்தக்கன. இலக்கிய இதழ்கள் உலகில் ஏழைதாசன் வலிவும் பொலிவும் பெற்று வளர்ந்தோங்கி நன்றாற்றல் பெருமைக்குரியது.

**பெருந்தமிழ்வேந்தன், பவானிசாகர்**

★ ஒரு இதழ் நடத்துவது என்றால் எவ்வளவு துன்பம் நேரும் என்று ஓர் அளவு தெரிந்தவன் என்ற முறையில் தாங்கள் ஆசிரியர் தொகுதி படித்து வருத்தமுற்றேன். ஏழைதாசன் இதழ் பற்றி பல மூத்த அறிஞர்கள் முன்பே பாராட்டி இருக்கிறார்கள் துளி கவிதைத் தொகுப்பும் பாராட்ட வேண்டியதே 'வடமொழி எழுத்தைத் தவிர்த்து இருந்தால் நன்றாக இருக்கும் அதற்கு முயலவும்.

**வி. தமிழ்ப்பித்தன், நன்மங்கலம்**

★ வெறும் இலக்கிய இதழாக மட்டுமல்லாமல் தமிழினத்தின் விடுதலைக்கான இதழாகவும் அமைந்துள்ளது. டென்மார்க் தமிழர் பொன்னண்ணாவின் துளிப்பா விடுதலையின் தாகமாய் அமைந்துள்ளது. தங்களின் முயற்சி வெற்றியடைய எனது அன்பு வாழ்த்துக்கள்.

**கா. பாலமுருகன், விழுப்புரம்**

★ மின்-பாக்கள் மின்னலையும் மின்சாரத்தையும் உட்பாய்ச்சுகிறது. விளாங்குடி விநாயகமூர்த்தி அவர்களது பணி இளைய சமுதாயத்தை நிமிர்ந்து பார்க்க வைக்கிறது அனைவரது வாழ்க்கையையும் படம்பிடித்து காட்டுவது போன்று அமைந்துள்ளது திருமதி ப அருளமுதம் எழுதிய கவிதை. வ சிங்காரவேலுவின் 'தமிழே நமதுடமை' தமிழர்களை மார்தட்டி பெருமைப்பட வைக்கிறது.

**எஸ்.பி. அருண், அன்னதாசம் பாளையம்**

படிப்பகம்

www.padippakam.com

★ டென்மார்க் கவிஞர் பொன்னண்ணா அவர்களின் மின்-பாக்கள் நன்பாக்களாக அமைந்துள்ளன. 'வாழ்க்கை' என்னும் கவிதை தத்துவங்கள் நிறைந்து நெஞ்சைத் தொடும் உண்மைகளைக் கொண்டுள்ளது. கவிஞர்களுக்கும் ஏழைதாசன் இதழுக்கும் என் அன்புப் பாராட்டுக்கள்.

செ. உலகநாதன், திருத்தணி

★ என் கஷ்ட்டத்தைவிட ஆசிரியரின் கஷ்ட்டத்தை படித்து மிக...மிக வேதனை அடைந்தேன். அரசுக்கு எத்தனையோ துறை இருக்கிறது—பட்ஜெட்டில் வரி உயர்வு ஏற்ற அதை விட்டுவிட்டு பத்திரிகைக்கும்—அஞ்சல் கடிதங்களுக்கும் விலை ஏற்றியது—பாரதி கூறியதுபோல் நெஞ்சு பொறுக்கவில்லை ஐக்கூ-200 வாசிக்க ஆசை. மீண்டும் ரூ. 5/- அனுப்பி இதழ் பெறுகிறேன். வரும் இதழில் விளம்பரத்தையும் சேருங்கள். பணபளு குறையும் டென்மார்க் கவிஞரின் மின்-பாக்கள் வெகுசிறப்பு.

திருச்சிற்றம்பலம் சுரேஷ், கடலூர்

★ பாவலர் பொன்னண்ணாவின் துளிப்பாக்கள் உண்மையிலேயே 'மின்'பாக்களே. "வாட்கை சைக்கிளாய் தாய்க்குலம்" — "தாய்ப்பாலில் உப்பு பார்க்கும் தமிழர் சிலர்" அருமை. எஸ். ஜி. இசட்கான் ஆய்வுமடல் சிறப்பானது. வ. சிங்காரவேலுவின் 'தமிழே நமதுடமை' என்ற பா துள்ளி எழச் செய்கிறது. விளாங்குடி விநாயகமூர்த்தியின் தொண்டுள்ளம் பாராட்டுக்குரியது. ஏழைதாசனே, வளர்க! ஒளிர்க!

பாவலர் எழுஞாயிறு, சேலம்-7

★ எப்படி இதழ்தோறும் ஒரு நபரை அறிமுகப்படுத்துகிறீர்கள்?! மின் பாக்களில் கடைசிப்பாவே மனதில் நிலைக்கிறது. வடுவூர் சிவ முரளியின் பயம் கவிதை அருமை. தமிழே நமதுடமையில் "உன்னை நன்றாய் ஈன்ற தமிழை உச்சரி என்றும் பயமில்லை" என்ற வரிகளும், மனக்கசிவை என்ற சொற்பிரயோகமும் மனதை வெகுவாய் கவர்கின்றன. ஆசிரியர் தொகுதியில் ஐக்கூ-200ன் சிரமத்தை படித்துணர்ந்தேன் என்னால் முடிந்த சிறு தொகை ரூ. 20/- இன்று பணவிடை செய்துள்ளேன்

வலம்புரிலேனா, திருவாலம்பொழில்

★ சாதனைப் படைப்பவர்களை இனங்கண்டு அறிமுகம் செய்வதில் ஏழைதாசனுக்கு நிகர் வேறு எந்த இதழும் வரமுடியாது என்றே சொல்லலாம். ஒவ்வொரு இதழிலும் ஒருவரை சிறப்பாக அறிமுகம் செய்து வரும் ஆசிரியரின் பெருந்தன்மையை பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழே நமதுடமை, சிங்காரவேலு அவர்களின் கவிதை இந்த இதழுக்கு முத்தாய்ப்பாய் இருந்தது

நந்தவனம் சந்திரசேகரன், திருச்சி-3

# வாசகர் வட்டம்

படிப்பகம்

www.padippakam.com

# தோல்விக்கு தோல்வி

எதுவும் முடியும் உன்னால் — நீ
ஏக்கம் கொள்வது எதனால் — உன்
இளமை இருக்கும்
போதே நீயும்
எதையும் செய்திடு அதனால்!

□□

நெஞ்சில் இருக்கு துணிவு — பின்
நிழலுக் கெதற்கு பணிவு -- அட
அஞ்சி சாவும்
அடிமை வாழ்வை
விட்டால் வாழ்வில் விடிவு!

□□

துணிந்தால் எதுவும் முடியும் — நாம்
நிமிர்ந்தால் இருளும் மடியும் — காணும்
மடமை எல்லாம்
உடனே அழித்தால்
நம்மின் வாழ்விருள் விடியும்!

□□

எழுந்தால் எதிரிகள் இல்லை — உன்
இமையை மூடினால் தொல்லை — நீ
விழிஎழு எதிரியின்
கதையை இன்றே
முடித்தால் இன்பம் எல்லை!

□□

எதையும் முடித்துக் காட்டு — உன்
சொல்லை ஜெயலாய் நாட்டு — வாழ்வில்
துன்ப துயரை
தூர நீயும்
துணிந்து விரைந்து ஓட்டு!

□□

தோல்வி எதற்கும் இல்லை — நீ
துணிந்தால் வெற்றி எல்லை — உன்
நெஞ்சில் கனிவும்
நேர்மைத் திறனும்
இருந்தால் வாழ்க்கை முல்லை!

□□

தோல்விக்கு தோல்வி தந்திடு — உன்
தோள்களில் வலிமை பெற்றிடு -- வரும்
கேட்டை எல்லாம்
நெஞ்சக் கோட்டையால்
தூள் தூள் ஆக்கி வென்றிடு!

புதுவை.
தமிழ்நெஞ்சன்

www.padippakam.com

BALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI. Regd. No. 55308/92

# தமிழில் அக்குபங்சர் நூல்

புரட்சிப் புயலின் புதிய கண்டுபிடிப்பாகிய **'ரெய்கி - அக்குபங்சர்'** புத்தகம்

இதுவரை தமிழில் வெளிவராத ஒரு அற்புத நூல்



**விலை ரூ. 100/-**

முழு முகவரியுடன் **M.O.** செய்தால் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.




## அக்குபங்சர் பயிற்சி

மிகக் குறைந்த செலவில் அக்குபங்சர் பயிற்சி பெறவும், அக்குபங்சர் சம்பந்தமான அனைத்து உபகரணங்கள் வாங்கவும் தொடர்பு கொள்க:

புரட்சிப் புயல் Dr.C. அப்துல்லா சேகு
**அப்துல்லா மிஷன் மருத்துவமனை,**
பெரியார் சிலை அருகில், காரைக்குடி - 630 001
சிவகங்கை, போன் 04565 - 33735, 23082, 22791

அக்குபங்சர் பயிற்சி அந்தந்த மாவட்ட தலைநகரில் 4 நாட்களுக்கு நடத்தப்படும்.

**சான்றிதழ்**

தகுதியுள்ள நபர்களுக்கு இலங்கைப் பல்கலைக் கழக சான்று D.Ac.M.D.(Acu)MD (Med.Alt) போன்ற பட்டயம், பட்டங்கள் பெற்று தரப்படும்!

Address : 25, Adappanvayal 8th Street, Pudukkottai-622 002,TN,India

படிப்பகம்

EALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI. Regd. No. 55308 / 92
R.C. No. 22449 / 98 ● Regd. No. PMG / CR / 01 / 2001 / PDK

www.padippakam.com

## ஆசிரியர் தொகுதி

தபால் கட்டண உயர்வு சிறுபத்திரிகைகளின் கழுத்தை நெரிக்கிறது மென்னியை பலவந்தமாக அழுத்துகிறது. ஏழைதாசன் உள்பட அனைத்து தோழமை இதழ்களும் மூச்சுவிட முடியாமல் திணறுகின்றன.

அஞ்சல் சலுகையில் இதழ் பிரதி ஒன்றுக்கு 25 காசு. தாமதமாகி விட்டால் ரூ. 2/- அதாவது ஏழு மடங்கு கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும். தனிச்சுற்றுக்கு என வருமிதழ்கள் விலை அநேகமாக ரூ. 1/- (அ) ரூ. 2/- ஆனால் அவற்றை அஞ்சலில் அனுப்ப ரூ. 2/- என்பது எந்த விதத்திலும் நியாயமில்லை.

அச்சிட்ட நூல் பிரிவில் ரூ. 1/- தபால் தலையுடன் வருகிற சிறு பத்திரிகைகளுக்கு ரூ. 2/- தண்டம் தீட்டுகிறார்கள். முகவரி சுற்றுத்தாள் உருவி விடாமல் இருக்க பசையோ, பின்னோ பயன்படுத்தினாலோ அச்சிற்றிதழை கடிதமாக பாவித்து ரூ. 15, 20/- தண்டம் வசூல் வேறு. இவற்றை திரும்ப பெறுகிற இதழாளன் அதோடு பத்திரிகை நடத்துவதையே நிறுத்த வேண்டியதுதான்.

இதழ்ப் பணி என்பது ஒரு இமாலயப் பணி. தன்னை உருக்கி பிறருக்கு வெளிச்சம் தருகிற மெழுகுவர்த்தி போன்றது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கடமையாற்றுவது ஏட்டுப் பணியாகும். பொதுமக்கள் விழிப்புணர்வு — தாயகம் — மக்கள் பயன்பெற — போராட — உடல், பொருள், ஆவியை இழக்கும் சேவை இது. இவற்றைக் கவனத்தில் கொள்ளாது அஞ்சல் விலை ஏற்றம் செய்திருப்பது கருத்துப் பரவலுக்கு மறைமுக தடையாகும். சிறுபத்திரிகைகளின் வாழ்நாளை முடிக்கும் மரண அடியாகும்.

பெறுநர் திரு.

ஏழைதாசன் அச்சகத்தில் அச்சிட்டு,
வெளியிடுபவர், ஆசிரியர் : எஸ். விஜயகுமார்.
முகவரி : 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை-622 002, தமிழ்நாடு
Address : 26, Adappanvayal 8th Street, Pudukkottai-622 002,TN, India

படிப்பகம்